ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு)

(மலர்-84) Nov (2) / 2010



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

## உட்பொதிவு


1. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் (ஸ்வாமி பராசரபட்டர் பாஷ்யம்)…………………......3

2. ஸ்ரீபாஷ்யம் …………………………………………………………………......6

3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் ……………………………………………….……....9

4. ஸ்ரீவசனபூஷணம்……………………………………………………………...11

5. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)………..……………………………………...15

6. திருவிருத்தம்.......................……………………………………………………......19

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

# ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்

(பகுதி – 61)

## 369. தாமோதர:

வயிற்றின் மீது கட்டப்பட்ட கயிற்றை உடையவன் என்பதால் தாமோதரன் எனப்படுகிறான். கீழே உள்ள வரிகள் காண்க:

- தாமாநி லோகநாமாநி பாந்தி யஸ்யோதராந்தரே தேந தாமோதரோ தேவ – யாருடைய வயிற்றில் “தாம” எனப்படும் லோகங்கள் அனைத்தும் ப்ரகாசமாக உள்ளனவோ அந்தத் தேவனே தாமோதரன் எனப்படுகிறான்.

- மஹாபாரதம் உத்யோக பர்வம் (71-9) – தேவாநாம் ஸுகசம்ஸித்வாத் தாமாத் தாமோதரம் விது: - தேவர்களுக்கு எப்போதும் சுகம் (தாம) என்பதை அளிப்பதால் இவன் தாமோதரன் எனப்படுகிறான்.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-6-20) – தத: ஸ தாமோதரதாம் ப்ரயயௌ தாம பந்தநாத் – யசோதையால் கயிறு கொண்டு வயிற்றில் கட்டப்பட்டதால் இந்தத் திருநாமம் பெற்றான்.

மஹாலக்ஷ்மியும் வியக்கும்படியாக இவனிடம் சாதுர்யங்கள் உள்ளபோதிலும், தனது அடியார்களிடம் கொண்டுள்ள வாத்ஸல்யம் காரணமாக யசோதையின் கயிற்றுக்குக் கட்டுப்பட்டான் என்று கருத்து.

## 370. ஸஹ:

அடியார்களால் கட்டப்படுவது (யசோதை), அதட்டப்படுவது (கம்ஸன்) மற்றும் நிந்திக்கப்படுவது (சிசுபாலன்) போன்ற பலவற்றையும் பொறுத்துக் கொள்பவன்.

## 371. மஹீதர:

இந்தப் பூமியின் பாரத்தை அவனே நீக்குவதால், இந்தப் பூமியைத் தாங்குபவன்.

## 372. மஹாபாக:

மிகுந்த ஸௌபாக்யம் கொண்டவன். நீளாதேவி தொடக்கமாக பதினாறாயிரம் தேவிமார்களும், திவ்யகன்னிகையான ருக்மிணியும், ஸத்யபாமாவும், ஜாம்பவதி தொடக்கமான நாய்ச்சிமார்களும் தாம் ஆசைப்பட்டு அடையும்படியான ஸௌபாக்யம் கொண்டவன் என்று கருத்து.

## 373. வேகவாந்

மனிதர்களைப் போன்று குழந்தையாக விளையாடுகின்ற நேரத்திலும் தனது உயர்ந்த ஐச்வர்யங்களுடன் கூடியவன். இதனால் இந்தத் திருநாமம் பெற்றான்.

## 374. அமிதாசந:

எவ்விதம் கடந்த திருநாமத்தில் கூறப்பட்டபடி உள்ளான் எனலாம்? இந்திரனுக்கு என்று இடையர்கள் வைத்த பெருத்த ஆகாரத்தை அப்படியே கோவர்த்தன பர்வதமாக நின்று உட்கொண்டதால் ஆகும். விஷ்ணுபுராணம் (5-13-121) – தேவோ வா தாநவோ வா த்வம் – நீ தேவனா அல்லது அசுரனா – என்றது காண்க.

## 375. உத்பவ:

“தாமோதரம் பந்தஹரம்” என்று கூறுவதற்கு ஏற்ப தன்னுடைய பந்தம் பற்றி (அதாவது இவன் கயிற்றால் கட்டப்பட்டது குறித்து) எண்ணுபவர்களின் ஸம்ஸார பந்தத்தை உடனே நீக்குவதால் ஸம்ஸாரம் நீக்கியவன் ஆகிறான்.

## 376. க்ஷோபண:

பந்தம் உண்டாகக் காரணமானவர்களையும் (அல்லது பந்தத்துக்கு உரியவர்களையும்), பந்தம் ஏற்படுத்துகின்ற ப்ரக்ருதியையும் திக்குமுக்காடச் செய்பவன்.

## 377. தேவ:

மாயை என்னும் பாசம் மூலமாக ஜீவர்களைக் கட்டுப்படுத்தி, காட்டில் கரடி – புலி – பன்றி போன்றவற்றை இழுத்துக் கொண்டு விளையாடுவது போன்று விளையாடுகிறான்.

## 378. ஸ்ரீகர்ப்ப:

இப்படியாக இன்பமான விளையாட்டுகளுடன் உள்ளவனாக, பெரியபிராட்டியாரை மனம் உவக்கும்படியாகச் செய்பவன். விஷ்ணோ: ஏஷா அநபாயிநீ – விஷ்ணுவை விட்டுப் பிரியாதவள் – என்றது காண்க.

## 379. பரமேச்வர:

இப்படியாகப் பெரியபிராட்டியார் தன்னுடன் மனம் மகிழ்ந்து இருக்கும் நிலையைப் பெற்றதால், தனது உயர்ந்த ஐச்வர்யங்களுக்கான பயனை அடைந்தவன். இராமாயணம் பாலகாண்டம் (77-33) – அதீவ ராம: சுசுப: அபிராமயா விபு: ஸ்ரீயா விஷ்ணுரிவாமரேச்வர: - எங்கும் உள்ளவனாய் தேவர்களுக்கெல்லாம் ஈச்வரனான விஷ்ணு, பெரியபிராட்டியாருடன் கூடியவனாய் உள்ளது போன்று, இராமன் சீதையுடன் கூடியபடி இருந்தான் – என்றது காண்க.

அழகியமணவாளன் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பராசரபட்டர் திருவடிகளே தஞ்சம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

பகவத் ராமானுஜர் அருளிச் செய்த

# ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 84)

இங்கு பேதவாதி ஆக்ஷேபம் செய்கிறார். அவர் கூறுவதாவது – கண்களால் காணப்படுகின்ற வேறுபாடுகளை உண்மையான வேறுபாடுகள் அல்ல என்று மறுக்கும் நிலை, சாஸ்த்ர ஞானம் மூலம் எவ்விதம் ஏற்படும்? இதற்கு, சாஸ்த்ரமே ப்ரத்யக்ஷத்தைக் காட்டிலும் பலமானது என்று கூறுபவர் எதிர்கேள்வி எழுப்புகின்றார். ஒருவன் கயிற்றைப் பார்த்து, பாம்பு என்று பயப்படுகிறான்; அப்போது அவன் நண்பன் அவனிடம் - ரஜ்ஜுரேஷா ந ஸர்ப்ப: இது கயிறாகும், பாம்பு அல்ல - என்று கூறியவுடன் அவனது பயம் விலகுகிறது; கண்களால் அதுவரை பாம்பு என்று கண்டவனின் பயம், நண்பனின் சொற்கள் மூலம் உண்டான அறிவால் மட்டும் எவ்விதம் நீங்கியது - என்கிறார். இதற்கு பேதவாதி கூறுவதாவது - நீங்கள் கூறுவது சரியல்ல. நீங்கள் கூறுவதில் இரண்டு பார்வைகளுக்கும் இடையே விரோதம் உண்டானதால் (கயிறு, பாம்பு என்னும் இரு பார்வைகள்) அந்த நிலை ஏற்பட்டது. ஆனால் இங்கு நாம் விவாதிப்பது ப்ரத்யக்ஷத்தை மூலமாகக் கொண்ட சாஸ்த்ரத்திற்கும், ப்ரத்யக்ஷத்திற்கும் விரோதம் என்ற நிலை ஆகும். இரண்டு வாதங்கள் சமபலம் கொண்டவையாக உள்ளபோது, அவற்றுக்கு இடையே விரோதம் ஏற்பட்டால், எது எதனை அர்த்தமற்றதாகச் செய்யும்?

இதற்கு விடை அளிக்கிறார். எந்த இரண்டு வாதங்களுக்கு இடையே விரோதம் வருகிறதோ, அவற்றில் எந்த வாதம் மற்றைய வாதத்தைத் தள்ளுகிறதோ, அப்படித் தள்ளப்பட்ட வாதத்தில் காணப்படும் ஏதோ ஒரு முரணா கருத்தானது, தள்ளுகின்ற வாதத்தில் இல்லாமல் உள்ளது என்று கொள்ளவேண்டும். இதே போன்று சாஸ்த்ரம் மற்றும் ப்ரத்யக்ஷம் குறித்து முரண்பாடு உண்டாகும்போது எடுத்துக்கொள்ளலாம். இங்கு கூறப்படுவது என்ன - ஒரு கருத்து ஏற்கப்படுகிறது, அதே பலம் கொண்ட மற்றொரு கருத்து தள்ளப்படுகிறது என்பதன் காரணம், அவை இரண்டிற்கும் இடையே உள்ள ஒற்றுமையோ, ஒன்றை ஒன்று அவை சார்ந்திருப்பதாலோ அல்லது ஒன்றை ஒன்று சாராமல் உள்ளதாலோ அல்ல. ஏன்? விளக்கு ஒன்று எரிகின்றபோது அதன் ஜ்வாலையானது ஒன்றாகவே ப்ரத்யக்ஷமாகத் தெரியும்போது, அந்த ஜ்வாலையானது எண்ணெய் மற்றும் திரி

போன்றவைகளால் பலவாக உள்ளது என்று கூற இயலாது அல்லவோ? அதாவது அங்கு ஜ்வாலை ஒன்றே என்னும் கருத்தை அனுமானம் மூலம் தள்ள இயலாது. அந்த ஜ்வாலை ஒன்றே என்று கூறுவது ப்ரத்யக்ஷம் மூலம் அறியப்படுகிறது. அதாவது ப்ரத்யக்ஷம் என்பது பாதிக்கத்தக்கதாக (பாத்யம்) உள்ளது. ஆகவே இரண்டுவிதமான ஞானங்களுக்கு (இரண்டு ப்ரத்யக்ஷங்கள், இரண்டு அனுமானங்கள், இரண்டு ஆகமங்கள், ப்ரத்யக்ஷம் மற்றும் அனுமானம் ஆகியவற்றுக்கு இடையே, அனுமானம் மற்றும் ஆகமம் ஆகியவற்றுக்கு இடையே, ப்ரத்யக்ஷம் மற்றும் ஆகமம் ஆகியவற்றுக்கு இடையே) விரோதம் ஏற்படும்போது எந்த ஒன்று, உள்ளதாகவே அறியப்படும்போதும் தள்ளப்படுகிறதோ அது பாத்யம் எனப்படும். அதாவது ஒரு வஸ்து அல்லது தன்மை "உள்ளது" என்று அறியப்பட்டபோதிலும் அது தள்ளப்பட்டது என்றால் பாத்யம் எனப்படும் (உதாரணமாக முத்துச்சிப்பியில் உள்ள வெள்ளி போன்ற பளபளப்பானது "வெள்ளி அல்ல" என்ற ஞானம் உண்டான பின்னர், வெள்ளி போன்று உள்ளபோதிலும் "அது வெள்ளி" என்று எண்ணிய ஞானம் தள்ளப்படுகிறது). இவ்விதம் வேறு எதனாலும் மறுக்க இயலாமலும், தள்ளப்பட இயலாமலும் உள்ள ஒன்று "பாதகம்" எனப்படும். இப்படியாகவே எங்கெங்கு இரண்டு ப்ரமாணங்களுக்கு இடையே விரோதம் உண்டாகிறதோ, அங்கங்கு பாத்யம் மற்றும் பாதகம் எது என்று தீர்மானிக்கவேண்டும்.

இதன் மூலம் உரைக்கப்படுவது என்ன? தொடக்கமும் முடியும் இல்லாமல் உள்ளதும், தடையில்லாமல் எப்போதும் இருந்து வருவதும், எந்தவிதமான குற்றமோ குறையோ அற்றதும், வேறு எதனாலும் ஏற்படுத்த இயலாத ஞானத்தை தான் மட்டுமே உண்டாக்கவல்லதாக உள்ளதும், எந்தவிதமான ஐயங்களுக்கும் அப்பாற்பட்டதும் ஆகிய சாஸ்த்ரங்கள் மூலம் - நிர்விசேஷமான, எப்போதும் உள்ள, தூய்மையான, எந்தவிதமான பந்தங்களும் அற்ற, தானாகவே ப்ரகாசிக்கின்ற, சிந்மாத்ர ப்ரஹ்மாத்ம ஐக்யம் பற்றிய ஞானம் ஏற்படுகிறது. இந்த ஞானத்தால் - ப்ரத்யக்ஷம் முதலானவற்றால் ஏற்படக்கூடிய பலவிதமான மாயத் தோற்றங்கள், இதனால் ஏற்படும் பிழைகள் முதலானவை மூலம் உண்டாகக் கூடிய பந்தங்கள் என்ற பிடியில் இருந்து விடுதலை உண்டாகிறது என்று கூறுவது உசிதமே ஆகும். இந்த ப்ரபஞ்சமானது பலவிதமான பேதங்களுடன் கூடியது என்று அறிவிக்கக்கூடிய ப்ரத்யக்ஷம் என்பதற்கு, எல்லையற்ற காலமாகத் தொடர்ந்து வருகின்ற வாஸனையின் விளைவாக உண்டாகக்கூடிய அவித்யை என்ற தோஷம் உண்டாகக்கூடியதே ஆகும்.

நீங்கள் கூறுவது போன்று சாஸ்த்ரங்களானவை தொடக்கமோ முடிவோ இல்லாதபோதிலும், தடையற்று எப்போதும் இருந்து வருகின்றபோதிலும், எந்தவிதமான தோஷமும் இல்லாதபோதிலும், பூர்வமீமாம்ஸை (4-4-39) - ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்காமோ யதேத – ஸ்வர்க்கம் அடையவேண்டும் என்ற ஆசை கொண்டவன் ஜ்யோதிஷ்டோமம் என்ற யாகம் மூலம் தேவதையை

ஆராதிப்பானாக – என்பது போன்றதான, பேதங்கள் உண்டாக்கவல்ல வாக்கியங்கள் உள்ள காரணத்தினால், சாஸ்திரங்களுக்கு பாத்யத்வம் உண்டாகிவிடும் அல்லவோ? (இப்படிப்பட்ட பாத்யத்வம் மூலம் ப்ரத்யக்ஷம் பாதிக்கப்படும், அல்லது சாஸ்த்ரங்களால் ப்ரத்யக்ஷம் பாதிக்கப்படும் என்பது இங்கு வைக்கப்படும் வாதம் ஆகிறது).

தென்னரங்கன் திருவடிகளே சரணம்
தென்னரங்கன் செல்வம் முற்றும் திருத்தி வைத்த இராமாநுசன்
திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 84)

## கத்ய (கதி) அநுஸந்தானத்துக்கு உதாரணம்

**மூலம் –**

ஸமீபம் ராஜஸிம்ஹஸ்ய ராமஸ்ய விதிதாத்மந:
ஸங்கல்பஹய ஸம்யுக்தைர்யாந்தீமிவ மநோரதை:

என்னும்படி பிராட்டி இருந்த இருப்பு இவனுடைய கத்யநுஸந்தாநத்துக்கு நிதர்சநம்.

**விளக்கம்** – இராமாயணம் (5-19-7) - ஸமீபம் ராஜஸிம்ஹஸ்ய ராமஸ்ய விதிதாத்மந: ஸங்கல்பஹய ஸம்யுக்தைர்யாந்தீமிவ மநோரதை: - தன்னுடைய கடமையை அறிந்தவனும், அரசர்களில் உயர்ந்தவனும் ஆகிய இராமனின் அருகாமையை அடையும்விதமாகத் தனது சிந்தனை என்னும் தேரை, இராமனைக் காணவேண்டும் என்ற ஆசை என்னும் குதிரைகள் மூலமாக சீதை இழுத்துச் சென்றாள் – என்பதற்கு ஏற்ப சீதை எவ்விதம் இராமனை அடையும் கதியை எண்ணியபடி இருந்தாளோ, அது போன்று ப்ரபந்நனும் இருத்தல்வேண்டும்.

நடைபெறவங்கிப் பகலொளிநாள் உத்தராயணமாண்டு
இடைவரு காற்றிரவி இரவின்பதி மின் வருணன்
குடையுடை வானவர்கோன் பிரசாபதி என்றிவரால்
இடையிடை போகங்களெய்தி எழிற்பதம் ஏறுவரே

**பொருள் –** இப்படியாக பரமபதம் செல்கின்ற ஜீவன் ஸூக்ஷ்ம சரீரத்துடன் நடந்து செல்லும்போது அக்னி, பகல்பொழுதின் தேவதை, சுக்லபக்ஷத்தின் தேவதை, உத்தராயணத்தின் தேவதை, வருடத்தின் தேவதை, வருடம் மற்றும் சூரியன் ஆகியவர்களின் இடையில் உள்ள வாயு, சூரியன், இரவின் தலைவனாகிய

சந்த்ரன், மின்னலின் தேவதை, வருணன், வெண்கொற்றக்குடை கொண்ட தேவர்களின் அதிபதியாகிய இந்த்ரன், ப்ரஜாபதி ஆகியவர்களால் வழிகாட்டியபடி செல்கிறான். அப்பாதையின் நடுவில் பலவிதமான இன்பங்களை அனுபவித்தபடி அழகான பரமபதம் செல்வர்.

பித்ருபத கடீயந்த்ர ஆரோஹ அவரோஹ பரிந்பமை:
நிரயபதவீ யாதாயாத க்ரமைச்ச நிரந்தரை:
அதிகத பரிச்ராந்தீந் ஆஜ்ஞாதரை: அதிவாஹ்ய ந:
ஸுகயதி நிஜச்சாயாதாயீ ஸ்வயம் ஹரிசந்தந:

**பொருள்** – நீர் ஏற்றத்தில் கட்டப்பட்ட பானை ஒன்று எவ்விதம் மேலே ஏறியபடியும், கீழே இறங்கியபடியும் இருக்குமோ அது போன்று நாமும் பித்ருக்களின் வழியே இறங்குதல் மற்றும் ஸ்வர்க்கம் புக ஏறுதல் போன்றவற்றைச் செய்தபடியே உள்ளோம். இப்படியாக நரக மார்க்கத்தில் போவதும், வருவதும் ஆகிய செயல்கள் மூலம் நாம் களைத்துப் போகிறோம். இப்படியாக உள்ள நம்மை ஆதிவாஹிகர்கள் மூலம் நல்வழியில் கொண்டு சென்று, எம்பெருமான் என்னும் சந்தன மரம் தானாகவே தனது நிழலை அளித்து, இன்பம் அளிக்கும்படிச் செய்கிறான்.

கதிவிசேஷாதிகாரம் ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

# ஸ்ரீவசனபூஷணம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 40)

101. மற்றையிருவர்க்கும் நிஷித்த விஷய நிவ்ருத்தியேயமையும்; ப்ரபந்நனுக்கு விஹித விஷய நிவ்ருத்தி தன்னேற்றம்.

**அவதாரிகை** - அவ்வாதிக்யந்தன்னை யருளிச்செய்கிறார் (மற்றையிருவர்க்கும்) என்று தொடங்கி.

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் கூறப்பட்டதான "ப்ரபந்நனுக்கு இது மிகவும் வேண்டும்" என்பதை மேலும் விளக்குகிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, சப்தாதி போகபரனான வைச்வர்யகாமனுக்கும், ஸாதநாந்தரபரனான உபாஸகனுக்கும், சாஸ்த்ர நிஷித்த விஷயமான ப்ரபந்நனுக்கு, சாஸ்த்ர விஹித விஷயமான பரதாராதியில் நிவ்ருத்தி மாத்ரமமையும்; ததுபய வ்யாவ்ருத்தனா யிருக்கிற ப்ரபந்நனுக்கு, சாஸ்த்ர விஹித விஷயமான ஸ்வதாரத்தில் நிவ்ருத்தி அவர்களைப் பற்ற வேற்றமென்கை. அவர்களிருவரிலும், ஐச்வர்யகாமனுக்கு, ஸ்வதாரத்தில் ஸாதந தசையில் தர்மபுத்த்யா ப்ரவ்ருத்தியும், பல தசையில் போக்யதா புத்த்யா ப்ரவ்ருத்தியுமாயிருக்கும்; உபாஸகனுக்கு பலம் பகவதநுபவமாகையாலே, அவனைப்போலே பல தசையில் அந்வயமில்லையே யாகிலும், உபாஸநதசையில் தர்மபுத்த்யா ப்ரவ்ருத்தி வேணும்; ப்ரபந்நனுக்கு, தர்மபுத்த்யா ப்ரவர்த்திக்கையும் ஸ்வாதிகார பஞ்ஜகமாகையாலே விஹித விஷயத்திலும் நிவ்ருத்தி வேணுமென்ற தாய்த்து.

**விளக்கம்** - சப்தம் முதலான புலன்களின் விஷயங்களில் வசப்பட்ட ஐச்வர்யத்தை விரும்புகின்றவன், பக்தி என்னும் ஸாதனத்தைக் கைக்கொண்டு நிற்கும் உபாஸகன் ஆகியவர்களுக்குச் சாஸ்த்ரங்களால் தள்ளப்பட்டதான பிறர்மனை நோக்குதல் போன்றவற்றைத் தவிர்த்தல் முதலானவையே போதுமானதாகும்.

ஆனால் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டபடி உள்ளதான தனது மனைவியைச் சேர்தல் என்பதையே தள்ளுகின்ற செயலானது, ப்ரபந்நனுக்கு அவர்களைக் காட்டிலும் ஏற்றம் அளிக்கவல்லதாகும். ஐச்வர்யத்தை விரும்பும் ஒருவனுக்கு அவன் ஸாதன நிலையில் உள்ளபோது மனைவியிடம் கொள்ளும் சேர்க்கை என்பது தனது இல்லற தர்மம் என்பதாகவும், பலதசையில் அவள் ஒரு இன்பப்பொருள் என்னும் புத்தியுடன் கூடியதாகவும் இருக்கும். உபாஸகனின் பலன் என்பது எம்பெருமானின் அனுபவமே ஆகும். எனவே, மேலே உள்ள ஐச்வர்யம் விரும்புகின்றவன் போல பலதசையில், தனது மனைவி ஒரு இன்பப்பொருள் என்னும் புத்தியுடன் சேர்க்கை இல்லை என்றாலும், உபாஸனத்தின் போது இல்லற தர்மம் என்ற புத்தியால் சேர்க்கை வேண்டும். ஆனால் ப்ரபந்நன் ஒருவன் தனது இல்லற தர்மத்திற்கு ஏற்றபடி மனைவியுடன் சேர்தல் என்பது உள்ளபோதிலும், அத்தகைய சேர்க்கை என்பது "எம்பெருமானைத் தவிர மற்ற எதிலும் இன்பம் இல்லை" என்ற அதிகாரத்திற்குத் தடை ஏற்படுத்தும் என்பதால் கூடாது.

102. இதுதான் சிலர்க்கழகாலே பிறக்கும்; சிலர்க்கருளாலே பிறக்கும்; சிலர்க்காசாரத்தாலே பிறக்கும்.

**அவதாரிகை** - தர்மபுத்த்யா ப்ரவ்ருத்திக்கு பரிஹாரம் பண்ணுவது போக்யதா புத்த்யா ப்ரவ்ருத்திதான் தவிர்ந்தாலன்றோ, அநாதிகாலம் வாஸநை பண்ணிப்போந்த விஷயங்களில் நிவ்ருத்திதான் பிறக்கும்படி யெங்ஙனே யென்கிற சங்கையிலேயருளிச் செய்கிறார் (இதுதான் சிலர்க்கு) என்று தொடங்கி.

**விளக்கம்** – இல்லற தர்மம் என்னும் புத்தியுடன் சேர்கின்ற சேர்க்கை என்பதையும் தவிர்த்தல் என்பது, "இன்பம் அளிக்கவல்லது" என்னும் புத்தியுடன் சேர்கின்ற சேர்க்கையைத் தவிர்த்தால் அல்லவோ கைகூடும்? ஆனால் எல்லையற்ற காலமாக ஈடுபட்டு வந்த மற்ற விஷயங்களில் ஆசை என்பது எவ்விதம் நீங்கும் என்பதை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (சிலர்க்கழகாலே பிறக்கும்) என்றது, ஸாக்ஷாத்க்ருத பகவத் தத்வரான பக்திபாரவச்ய ப்ரபந்நர்க்கு, ஸகலஜநமோஹநமான தத்விக்ரஹ ஸௌந்தர்யாநு பவத்தாலே பிறக்குமென்றபடி. (சிலர்க்கருளாலே பிறக்கும்) என்றது, தத்வயாதாத்ம்ய தர்சிகளான ஜ்ஞாநாதிக்ய ப்ரபந்நர்க்கு, "நம்மையநுபவிக்க இட்டுப் பிறந்த வஸ்து இப்படி அந்யவிஷய ப்ரவணமா யநர்த்தப்படுவதே" என்று அந்யவிஷய ஸங்கமறும்படி யவன் பண்ணும் பரமக்ருபையாலே பிறக்குமென்றபடி. (சிலர்க்காசாரத்தாலே பிறக்கும்) என்றது, அளவிலிகளான அஜ்ஞாந ப்ரபந்நர்க்கு, அவதாரங்களில் "மர்யதாநாஞ்ச லோகஸ்ய கர்த்தா காரயிதாச ஸா" என்கிறபடியே, அதிகாராநுகுணமாக வவனாசரித்தும்

ஆசரிப்பித்தும் போந்தபடிகளையும், அளவுடையரான பூர்வாசார்யர்க ளாசரித்துப் போந்தபடிகளையும், சாஸ்த்ரமுகத்தாலு மாசார்யோபதேச க்ரமத்தாலுமறிகையாலே அவ்வாசாரங்களை யநுஸந்திக்க வநுஸந்திக்கப் பிறக்கு மென்றபடி.

**விளக்கம்** – "சிலர்க்கழகாலே பிறக்கும்" என்பது என்ன? ஸர்வேச்வரனை நேரிலேயே கண்டு அறிந்த காரணத்தால் பக்திப் பரவசத்தில் மூழ்கிய ப்ரபந்நர்களுக்கு (இப்படியாக பெண்கள் உட்பட மற்ற விஷயத்தில் உள்ள ஆசை எவ்விதம் விலகும் என்றால்) பார்ப்பவர்களின் மனங்களைக் கவர்கின்ற எம்பெருமானின் திவ்யமான திருமேனி அழகு காரணமாக ஆகும். "சிலர்க்கருளாலே பிறக்கும்" என்பது என்ன? உண்மையான மெய்ப்பொருளை உள்ளதுஉள்ளபடி உணர்ந்த ஞானம் மூலமாக ப்ரபந்நராக உள்ளவர்களுக்கு (இந்த ஆசை எப்படி விலகும் என்றால்) "உன்னுடைய ஆத்மாவானது என்னை அனுபவிப்பதற்காகவே உள்ளது. அப்படிப்பட்ட ஆத்மா இவ்விதம் உலக விஷயங்களில் சிக்கி அழிவது ஏனோ?" என்று உலக விஷயங்களின் மீது உள்ள பற்றுதல்களை அழிக்கும்படியாக எம்பெருமான் செய்கின்ற கருணையான செயல்கள் மூலம் ஏற்படும். "சிலர்க்காசாரத்தாலே பிறக்கும்" என்பது என்ன? சூர்ணை 44-ல் கூறியபடி அறியாமை என்பதால் ப்ரபந்நரானவர்களுக்கு (இந்த ஆசை விலகுவது எப்படி என்றால்), இராமாயணம் ஸுந்தரகாண்டம் (35-11) – மர்யதாநாஞ்ச லோகஸ்ய கர்த்தா காரயிதாச ஸா – இந்த உல்கில் உள்ள அனைத்துவிதமான தர்மங்களைத் தான் செய்பவனாகவும், மற்றவர்களைச் செய்ய வைப்பவனாகவும் இராமன் உள்ளான் - என்று கூறியபடி, அதிகாரங்களுக்குத் தகுதி ஏற்படும்படியாகத் தர்மங்களைக் கடைபிடித்தும், மற்றவர்களைக் கடைபிடிக்கும்படிச் செய்தும், ஞானம் நிறைந்த ஆசார்யர்களின் தர்மங்களை அறிந்தும், சாஸ்த்ரம் மற்றும் ஆசார்யன் மூலமாக இவைகளை அறிந்தும் செய்வதால், அந்த ஒழுக்க முறைகளை எண்ணியபடி உள்ளதால் கைக்கூடும்.

103. பிறக்கும் க்ரமமென் என்னில்; அழகு அஜ்ஞாநத்தை விளைக்கும்; அருள் அருசியை விளைக்கும்; ஆசாரம் அச்சத்தை விளைக்கும்.

**அவதாரிகை** - இவ்வோஹேதுக்களால் பிறக்கும் க்ரமத்தை, தஜ்ஜிஜ்ஞாஸு ப்ரச்நத்தை யநுவதித்துக் கொண்டருளிச் செய்கிறார் (பிறக்கும் க்ரமம்) என்று தொடங்கி.

**விளக்கம்** – மேலே பல காரணங்கள் கூறப்பட்டன. இப்படிப்பட்ட காரணங்கள் மூலமாக "மற்ற விஷயங்களின் மீது உள்ள நாட்டம் தவிர்தல்" என்பது எவ்விதம்

பிறக்கும் என்ற கேள்வியை எழுப்பிக்கொண்டு, அதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (அழகு அஜ்ஞாநத்தை விளைக்கையாவது), சித்தாபஹாரியாகையாலே, விஷயாந்தரந்தன்னை யொன்றாக வறியாதபடி யாக்குகை. (அருள் அருசியை விளைக்கையாவது) – விஷயாந்தரங்களைக் காணும்போது அருவருத்துக் காரித்துமிழ்ந்து போம்படி பண்ணுகை. (ஆசாரம் அச்சத்தை விளைக்கையாவது) – ருசி செல்லச் செய்தே, அவர்களாசரித்தபடி செய்யாதபோது நமக்கநர்த்தமே பலிக்கும் என்று, விஷய ஸ்பர்சத்திலிழிய நடுங்கும்படி பண்ணுகை. ஆகையால் இக்க்ரமத்திலே பிறக்குமென்று கருத்து.

**விளக்கம்** - "அழகு அஜ்ஞாநத்தை விளைக்கையாவது" என்பது என்ன? காண்பவர்களின் மனதைச் சட்டென்று கவரும்படி ஸர்வேச்வரன் உள்ளதால், தன்னைத் தவிர உள்ள மற்ற சிற்றின்பங்களை ஒன்றாக அறிந்து கொள்ளாதபடிச் செய்வதாகும். "அருள் அருசியை விளைக்கையாவது" என்பது என்ன? மற்ற விஷயங்களைக் காணும்போது அருவருப்பு அடைந்து, காரி உமிழ்ந்து அகன்று போகும்படிச் செய்தலாகும். "ஆசாரம் அச்சத்தை விளைக்கையாவது" என்பது என்ன? நம் போன்றவர்களுக்கு நமது ஆசார்யர்கள் என்ன செய்தார்களோ அதனை நாம் செய்யாமல் விட்டால் கேடு உண்டாகும் என்று பெண்களின் சேர்க்கையில் ஈடுபடுவதை எண்ணி நடுங்கும்படிச் செய்வதாகும். இப்படியாக இந்த மூன்று நிலைகளும் உண்டாகும் என்று கருத்து.

ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

.......தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 50)

1-3-7 ஒன்றெனப் பலவென வறிவரும் வடிவினுள் நின்ற
நின்றெழில் நாரணன் நான்முக னரனென்னு மிவரை
ஒன்றநும் மனத்துவைத் துள்ளிநும் மிருபசை யறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனிடை நம்முடைய நாளே.

**பொருள் -** ஒன்று எனவும், பல எனவும் அறிந்து கொள்வதற்கு அரிதான வடிவில் நிற்கின்ற சிறந்த குணங்களை கொண்டவன் நாராயணன் ஆவான். நான்முகன் மற்றும் சிவன் ஆகியவர்களை உங்கள் மனதில் ஒன்றாக வைத்து ஆராய்ந்து, அவர்கள் மீது நீங்கள் வைத்துள்ள பற்றுதலை நீக்குங்கள். உங்களது ஆயுள் உள்ளபோதே நாராயணனிடம் பக்தி செய்யுங்கள்.

**அவதாரிகை -** “அப்படியே செய்கிறோம்” என்று ஆறியிருந்தார்கள்; ஐயோ! நீங்கள், உங்களுடைய ஆயுஸ்ஸினுடைய ஸ்திதியும், இழக்கிற விஷயத்தின் நன்மையும் அறியாமையிறே ஆறியிருக்கிறது; நீங்கள் முடிந்துபோவதற்கு முன்னே நிர்ணயோபாயங்களாலே வஸ்து இன்னதென்று நிர்ணயித்து, நிர்ணீதனானவன் பக்கலிலே கடுக பக்தியைப் பண்ணப்பாருங்கோள் என்று கீழிற் பாட்டுக்கு சேஷமாயிருக்கிறது இப்பாட்டும். நீங்கள் மந்தாயுஸ்ஸுக்களாகையாலே கடுகச் செய்து கொடுநின்று, “செய்கிறோம்” என்னவேணும்; “செய்கிறோம்” என்று செய்யவெண்ணாது என்கிற இதுவே விசேஷம் கீழிற் பாட்டிற்காட்டில்.

**விளக்கம் –** ஆழ்வார் கூறியதைக் கேட்ட ஸம்ஸாரிகள், “அப்படியே செய்கிறோம்”, என்று கூறிவிட்டு ஏதும் செய்யாமல் இருந்தனர். உடனே ஆழ்வார், ”ஐயோ! நீங்கள் உங்களது ஆயுள் காலத்தின் நிலைமையையும், இழக்கின்ற

பொருளினுடைய நன்மையையும் அறிந்து கொள்ளாமல் காலம் தாழ்த்துகின்றீர்களே! நீங்கள் மரணம் அடைவதற்கு முன்பாக, உறுதி செய்யப்பட்ட வழிகளால் அடையவேண்டிய பொருள் இன்னது என்று நிச்சயித்து, அப்படியாக நிச்சயம் செய்யப்பட்ட எம்பெருமான் அருகில் விரைவாகச் சென்று, பக்தியைச் செய்யப் பாருங்கள்", என்று கூறுவதாக கடந்த பாசுரத்தின் தொடர்ச்சியான பாசுரமாக இந்தப் பாசுரம் உள்ளது. நீங்கள் குறைவான ஆயுள் உடையவர்களாக இருப்பதால் விரைவாகச் செய்ய முடிவு செய்து, "இதோ செய்கிறோம்" என்று கூறவேண்டும்.

**வ்யாக்யானம் -** (ஒன்றென) மூவர் ப்ரதாநராய், மூவர்க்கும் மூன்று சரீரமுண்டாய்த் தோற்றுகையாலே, மூன்று சரீரத்திலும் ஒருவனே அதிஷ்டித்துக் கொண்டு நிற்கிறானோ? அன்றியே, மூன்றிலும் மூன்று சேதநர் அதிஷ்டித்துக் கொண்டு நிற்கிறார்களோ என்று அறிய அரிய வடிவுகளை உடையராய் நிற்கிற. "ஏகாத்மாதிஷ்டிதமோ? அநேகாத்மாதிஷ்டிதமோ" என்று அறிய அரிதான வடிவை உடையராய் நின்ற. (நன்றெழில் நாரணன்) அநந்யபரமான நாராயணாநுவாகாதிகளை நினைக்கிறார். எழிலென்று "அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:" என்கிற புகரை நினைக்கிறது. (நன்றெழில்) ரூபஸ்ரீயைப் பார்த்தவாறே "கண்டவாற்றால் தனதே உலகென நின்றான்" என்கிறபடியே ஸர்வரக்ஷகன் இவனே என்னலாம்.

**விளக்கம் –** (ஒன்றென) – மூவரும் முதன்மையானவராக, மூவருக்கும் மூன்று சரீரம் உண்டு எனத் தோன்றுவதால், மூன்று சரீரத்திலும் ஒருவனே நிற்கிறானா அல்லது மூன்றிலும் மூன்று சேதனர்கள் நிற்கின்றனரா என்று அறிந்து கொள்வதற்குக் கடினமான வடிவங்களைக் கொண்டு நிற்கின்ற. ஓர் ஆத்மாவின் நிலையோ அல்லது பல ஆத்மாக்களின் நிலையோ என்று அறிந்து கொள்வதற்கு அரிய வடிவை உடையவன். (நன்றெழில் நாரணன்) – அவனைத் தவிர வேறு எதனையும் கூறாத நாராயண அனுவாகத்தை எண்ணுகிறார், எழில் என்பதன் மூலம். ஸுபால உபநிஷத் – அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண: - தோஷங்கள் இல்லாதவனும் திவ்யமானவனும் நாராயணன் மட்டுமே - என்று கூறுகின்ற மேன்மையை நினைக்கிறார். (நன்றெழில்) – திருமேனியின் வடிவைப் பார்த்தபடியே திருவாய்மொழி (4-5-10) - கண்டவாற்றால் தனதே உலகென நின்றான் – என்பதால், அனைத்தின் ரக்ஷகனும் இவனே எனலாம்.

**வ்யாக்யானம் -** (நாரணன்) திருநாமத்தைப் பார்த்தவாறே தன்னையொழிந்ததடைய ப்ரகாரமாய்க் கொண்டு தான் ப்ரகாரியாய் இருப்பானொருவன் என்று தோற்றியிருக்கும். (நான்முகன்) ஒருவன் ஸ்ருஷ்டி காலத்திலே வந்தால் நாலு வேதங்களையும் உச்சரிக்கைக்கு நாலு முகத்தையுடையனாய் ஸ்ருஷ்டி கார்யம்

ஒன்றிலும் அந்விதன் என்று தோற்றியிருக்கும். (அரன்) ஒருவன், ஸம்ஹார்த்ருத்வம் ஒன்றிலும் அந்விதன் என்று தோற்றியிருக்கும். "ஸ்ருஷ்டி ஸ்தித்யந்தகரணீம் ப்ரஹ்ம விஷ்ணு சிவாத்மிகாம் ஸ ஸம்ஜ்ஞாம் யாதி பகவாநேக ஏவ ஜநார்த்தந:" என்கிறபடியே ஸம்ஜ்ஞைகளில் வந்தால் ஒக்கவொடுக்கலாய் விஷ்ணு சப்தத்தோடு பர்யாயமான ஜநார்தந சப்தத்தையிட்டுத் தலைக்கட்டுகையாலே தானே ப்ரதாநன் என்று தோற்றும்படியாய் இருக்கும்.

**விளக்கம்** – (நாராயணன்) திருநாமத்தைப் பார்த்த உடனேயே தன்னைத் தவிர உள்ள அனைத்தையும் ப்ரகாரமாய்க் கொண்டு, தான் மட்டுமே ப்ரகாரியாய் இருக்கின்ற நிலை தோன்றும். (நான்முகன்) – ஒருவன் ஸ்ருஷ்டிகாலம் வந்தால் நான்கு வேதங்களையும் கூறுவதற்காக நான்கு முகத்தைக் கொண்டு, "படைத்தான்" என்ற செயலை மட்டுமே செய்பவனாக நிற்பவன். (அரன்) – ஒருவன் அழிக்கும் தொழில் மட்டுமே செய்பவன் என்று இருப்பவன். விஷ்ணுபுராணம் (1-2-23) – ஸ்ருஷ்டி ஸ்தித்யந்தகரணீம் ப்ரஹ்ம விஷ்ணு சிவாத்மிகாம் ஸ ஸம்ஜ்ஞாம் யாதி பகவாநேக ஏவ ஜநார்த்தந: - படைத்தல், காத்தல் மற்றும் அழித்தல் ஆகியவற்றைச் செய்கிற பெயர்களை, பகவான் எனப்படும் ஜநார்தனன் ஒருவனே பெறுகிறான் - என்னும்படி பெயர்களை ஒத்துப் பார்க்கும்போது விஷ்ணு என்ற சப்தத்துடன் ஒத்துப் போகின்ற ஜநார்த்தன சப்தம் கூறி முடிப்பதால், தானே முதன்மையானவன் என்று தோன்றும்படியாக உள்ளவன்.

**வ்யாக்யானம்** - இப்படி விஸத்ருச ஸ்வபாவராய் இருக்கிற இவர்களை (ஒன்றநும் மனத்து வைத்து) அவனையொழிந்த இருவரிலே ஒருவனுக்கு உத்கர்ஷம் வேணும் என்றாதல். நிர்ணயிப்பதற்கு முன்னே இவனுக்கு உத்கர்ஷம் வேணும் என்றாதல் பாராதே ஒரு படிப்பட உங்கள் நெஞ்சிலே வைப்பது. (உள்ளி) உள்ளுவது - ச்ருதி ந்யாயங்களாலே ஆராய்வது. அவர்கள் ஸ்வரூப ஸ்வபாவங்களை இப்படி ஆராய்ந்தவாறே ஒரு வஸ்து ப்ரதாநமாய், இரண்டு அப்ரதாநமாய்த் தோற்றும்; தோற்றினவாறே (நும் இருபசை அறுத்து) அவ்விரண்டிலும் நீங்கள் பண்ணுகிற நசையைத் தவிருவது. வஸ்துகதமாய் வருவதொரு உத்கர்ஷம் இல்லை; நீங்கள் ஏறிடுகிற இவற்றைத் தவிருவது. (நன்றென நலஞ்செய்வதவனிடை) இப்படி நிர்ணீதனானவன் பக்கலிலே "இவன் நமக்கு கைப்புகுந்தான்" என்று உங்களுக்கேறத் தேற்றம் பிறக்கும்படி அநந்ய ப்ரயோஜநமான பக்தியைப் பண்ணப் பாருங்கோள். க்ரமத்திலே செய்கிறோம் என்றிருந்தார்கள் – (நம்முடை நாளே) கெடுவிகாள்! நம்முடைய ஆயுஸ்ஸின் நிலை அறிவிகோளே! கடுக ஆச்ரயிக்கப் பாருங்கள். "நம்முடை நாள்" என்னுங்காட்டில் - ஆயுஸ்ஸின் நிலையை அறிந்தபடி என்னென்னில், முன்பே "மின்னின் நிலையில" என்று அருளிச்செய்தாரிறே. ஒருவன் இரண்டு கதவையும் அடைத்துக் கொண்டு கிடந்து உறங்காநின்றால், நெருப்புப்பற்றி எரியாநின்றால் "அவிக்கிறோம்" என்று ஆறியிருக்கலாமோ? "நந்தந்த்யுதித ஆதித்யே நந்தந்த்யஸ்தமிதே ரவௌ ஆத்மநோ

நாவபுத்யந்தே மநுஷ்யா ஜீவதக்ஷயம்" ஆதித்யோதயத்திலே வந்தவாறே "த்ரவ்யார்ஜநகாலம் வந்தது" என்று உகப்பர்கள்; அவன் அஸ்தமித்தவாறே "அபிமத விஷயங்களோடே ரமிக்கைக்குக் காலம் வந்தது" என்று உகப்பர்கள். சாலிலெடுத்த நீர்போலே தங்கள் ஆயுஸ்ஸு குறைகிறதென்று அறியாதிரா நின்றார்கள் என்னாநின்றதிறே.

**விளக்கம்** - இப்படியாக வேறுபட்ட தன்மைகளுடன் இருக்கின்ற இவர்களை. (ஒன்றநும் மனத்து வைத்து) – அவனைத் தவிர இருவரிலே ஒருவனுக்கு உயர்வு வேண்டும் என்றாதல். நிர்ணயிப்பதற்கு முன்னால் இவனுக்கு உயர்வு வேண்டும் என்பது காணாமல் ஒருபடிப்பட்ட உங்கள் நெஞ்சில் வைத்து. (உள்ளி) – உள்ளுதல் என்றால் ச்ருதி ந்யாயங்களில் ஆராய்தல். அவர்களது ஸ்வரூப ஸ்வபாவங்களை ஆராயும்போது ஒரு வஸ்து மட்டுமே முதன்மையாக, மற்ற இரண்டும் இரண்டாம் பக்ஷமாய்த் தோன்றும். (நும் இருபசை அறுத்து) – அப்படித் தோன்றினவுடன் அந்த இரு பொருள்களிலும் உள்ள ஈடுபாட்டைத் தவிர்த்து. அந்த இரு பொருள்களுக்கும் இயற்கையாக எந்த உயர்வும் இல்லை, நீங்களாகவே அவைகளுக்கு உயர்வு ஏற்படுத்துகிறீர்கள் என்கிறார். (நன்றென நலஞ்செய்வதவனிடை) – இப்படியாக நிர்ணயிக்கப்பட்டவன் அருகில் சென்று "இவன் நமக்குக் கைபுகுந்தான்" என்று உங்களுக்குத் தெளிவு பிறக்கும்படி, வேறு பலனை எதிர்பாராமல் பக்தியைச் செய்யுங்கள். ஸம்ஸாரிகள், "காலப்போக்கில் செய்கிறோம்", என்று இருந்தனர். (நம்முடை நாளே) – கெட்டீர்கள்! நம்முடைய ஆயுளின் நிலையை நீங்கள் அறிவீர்கள். விரைவாகச் சென்று அவனைப் பற்றுங்கள். "நம்முடை நாள்" என்று கூறுவதன் மூலம் ஆயுளின் நிலையை எவ்விதம் அறிந்தார் என்றால், திருவாய்மொழி (1-2-2) - மின்னின் நிலையில – என்றார் அல்லவோ? ஒருவன் இரண்டு கதவுகளையும் அடைத்தபடி உறங்கிக் கொண்டு இருக்கும்போது தீ பற்றினால் அதனைக் கண்டு, "அணைக்கிறோம்", என்று ஏதும் செய்யாமல் இருக்கலாமோ? இராமாயணம் – நந்தந்த்யுதித ஆதித்யே நந்தந்த்யஸ்தமிதே ரவௌ ஆத்மநோ நாவபுத்யந்தே மநுஷ்யா ஜீவதக்ஷயம் - சூரியன் உதித்தவுடன் "பொருள் தேடும் காலம் வந்தது" என்று மகிழ்வார்கள்; அஸ்தமிக்கும் நேரத்தில், "குடும்பத்துடன் இன்பமாக இருக்கலாம்", என்று மகிழ்வர்; தங்களது ஆயுள் குறைவதை அறியாமல் உள்ளனர் – என்றது காண்க.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவிருத்தம்

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த

வ்யாக்யானம்

மூலமும், எளிய தமிழ்நடையும்

(பகுதி – 13)

10. மாயோன் வடதிருவேங்கடநாட, வல்லிக்கொடிகள்
நோயோவுரைக்கிலுங் கேட்கின்றிலீருரையீர், நுமது
வாயோவதுவன் றி வல்வினையேனுங் கிளியுமெள்கு
மாயோவடுந்தொண்டையோ, அறையோவிதறிவரிதே

**பொருள்** – (நாயகன் நாயகியின் தோழிகளைப் பார்த்து உரைக்கிறான்) அனைவரும் வியந்து நிற்கும்படியாகச் செயல்கள் செய்பவனும், உயர்ந்த குணங்கள் கொண்டவனும் ஆகிய திருவேங்கடமுடையான் எழுந்தருளியுள்ள திருவேங்கடமலையை இருப்பிடமாகக் கொண்ட கொடி போன்ற பெண்களே! எனது பிரிவாற்றாமை என்னும் நோய் பற்றி நீங்களாகவே அறிந்து கொள்ளாமல், நான் கூறினாலும் கேட்காமல் உள்ளீர்கள். என்னை இவ்விதம் வருத்துவது எது என்று நீங்கள் உரைக்கவேண்டும். இவ்விதம் வருத்துவது உங்களுடைய பேச்சா? அல்லது மிகுந்த பாவங்களின் வினைப்பயன் கொண்ட நானே காரணமா? அல்லது அங்குள்ள மரங்களில் அமர்ந்துள்ள கிளிகளை விரட்ட நீங்கள் செய்கின்ற "ஆயோ" என்ற ஓசையா? அல்லது உங்களது அந்தக் குரலா? எது என்னை வருத்துகிறது என்று உரைக்கவேண்டும்.

**உட்கருத்து** - கடந்த சில பாசுரங்களில் தன்னைவிட்டு சக வைஷ்ணவர்கள் பிரிந்து திருவேங்கடமலைக்குச் சென்று விடுவார்களோ என்று ஆழ்வார் அச்சப்படுவதைக் கூறினார். இங்கு அந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் மறுமொழி உரைக்கின்றனர். அவர்கள் ஆழ்வாரிடம், "பலவிதமான வியக்க வைக்கும்படியான குணங்கள் கொண்ட திருவேங்கட முடையானையே எண்ணி பரவசத்தில் உள்ளவரே! நீங்கள் அவனிடம் கொண்டுள்ள பரவசம் காரணமாக 'நாங்கள் உங்களை விட்டுப் பிரியோம்' என்று கூறுவதைக் கேட்காமல் உள்ளீர். எங்களை உங்களிடம் இப்படியாக ஈர்த்து நிற்க

வைப்பது எது? திருவேங்கடமுடையானைக் கண்டதால் எழுந்த உங்கள் திருமுக மண்டலத்தின் மலர்ச்சியா? உங்களை விட்டு அகன்று செல்ல இயலாமல் நாங்களும், கிளி போன்று பசுமையான நிறம் கொண்ட ஸர்வேச்வரனும் நிற்கும்படியாகச் செய்கின்ற உங்களது பாசுரங்களா? அந்தப் பாசுரங்களை உரைக்கின்ற உங்களது இனிமையான குரலா? எது எங்களை இவ்விதம் உருக வைக்கிறது என்று உரைப்பீராக", என்றனர்.

**அவதாரிகை** – துறை, மதியுடன் படுத்தல். தலைமகன் தோழிமாருந் தானுமாய்ப் புனத்திலேயிருக்க, தலைமகன் சென்று இரண்டாங்காட்சியாகையாலே தன் ஆசையை ஆவிஷ்கரிக்கிறான். "மதியுடன் படுத்தல் தோழிக்குரித்து" என்னும் பக்ஷத்திலே அவள் முகத்தை நோக்கிச் சென்னானாகவுமாம்.

**விளக்கம்** – இந்தப் பாசுரம் மதியுடன் படுத்தல் துறையில் உள்ளதாகும். மதியுடன் படுத்தல் என்றால் என்ன? முந்தின நாள் பிரிந்து செல்கின்ற தலைமகன், அடுத்த நாள் தலைவியும் தோழிகளும் நெல்வயலில் காவலுக்கு நிற்கும்போது அங்கு வந்து தன்னுடைய ஆசையை அறிவித்தல் ஆகும். இதனைத் தோழிகளிடம் உரைத்து அவர்களை மயக்குகிறான் என்று கருத்து. தோழியும் தலைவியும் வயலில் காவலுக்கு நிற்பதைக் காண்கிறான். முதல் நாளில் தற்செயலாகச் சந்தித்துவிட்டுச் சென்றனவன், இரண்டாவது முறையாக மீண்டும் சந்திக்கும்போது தனது ஆசையை அறிவிக்கிறான் என்னவுமாம். தோழியின் முகத்தைப் பார்த்து உரைத்தான்.

**வ்யாக்யானம்** - (மாயோன்) இந்த ஆச்சர்யமான பதார்த்தங்களை யுடையனாவதே; பரமபதத்தை இருப்பிடமாகவுடையவன்; "கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடம்" என்னும்படி இங்கே வந்து நின்ற நீர்மையிலேற்றமென்னும்படி. (வட திருவேங்கடநாட) திருமலைக்கு அவ்வருரு நாடில்லையென்றிருக்கிறார்; ஆழ்வார்களருளிச்செயல் நடையாடின தேசமே நாடென்றிருக்கிறார். (வல்லிக்கொடிகாள்) வல்லி என்றது "ஆணறுத்து" என்னும்படி ஸ்த்ரீத்வத்தின் அதிசயத்தைச் சொல்லுகிறது, "கொடிகாள்" என்று உபக்நத்திலே அணைந்து நிற்கவேண்டியிருக்கிறபடி; "பதிஸம்யோகஸுலபம்" இத்யாதி. கொம்பு ஒன்றாய்க் கொடி பலவாயிருக்கிறபடி. (நோயோ) முடியவும் ஒட்டாதே ஜீவிக்கவும் ஒட்டாதேயிருக்கிறபடி. (நோய் உரைக்கிலும் ஓ கேட்கின்றிலீர்) என்னும் நோய் கொள்ளுவேனும் நானேயாய் வருவேனும் நானேயாய்ச் சொல்லுவேனும் நானேயானாலுங் கேட்கை அரிதாக வேணுமோ? அநுஷ்ட்டாநம் வேண்டா, கேட்கவே அமையும். (உரையீர்) கேளாதவர்களைச் சொல்லீரென்கிறது, ஆசையின் மிகுதி இருந்தபடி; நோயறிந்தீராகில் நாங்கள் இனிச்சொல்லுவதென்னென்ன, நோய் கொண்டமையறிந்தேனத்தனை, நோய்க்கு நிதாநமறிந்திலேன். (நுமதுவாயோ) உம்முடைய முகவிகாஸமோ? (அது அன்றி வல்வினையேனுங் கிளியும் எள்கும் ஆயோ) அதில் ஏகதேசமான "ஆயோ" என்கிற

சொல்லோ? (கிளியும் எள்கும்) இவள் சொல்லைக் கேட்டு சப்தக்ரஹணத்தாலே புறம்புள்ளத்தை விட்டுக் கிடக்கிறபடி. எள்குதல் ஈடுபடுதல் என்றபோது இச்சொல்லைக் கேட்டுத் துவண்டுகிடக்கிறபடி. (வல்வினையேனும்) அவற்றைப் போலன்றியே சப்த க்ரஹணத்தாலும் ரூபக்ரஹணத்தாலும் ஈடுபட்டபடி. (தொண்டையோ) அதரமோ? (அடும்) முடிக்கிறபடி உண்டாயிருந்தது. (அறையோ இது அறிவரிது) - இன்ன வ்யக்தியென்று அறிகிறிலேன்; அறியவொண்ணாமைக்கு அறையோ அறை; "நாவலோ நாவல்" என்றாற்போலே.

**விளக்கம்** – (மாயோன்) - இங்கு ஆச்சர்யமான குணம் கொண்டவன் என்றது ஏன்? வாக்காலும் மனதாலும் எட்ட இயலாதபடி உள்ள பரமபதத்தைத் தனது இருப்பிடமாகக் கொண்டவன்; அப்படிப்பட்ட பரமபதத்தை விட்டு, நான்முகன் திருவந்தாதி (47) - கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடம் – என்பதற்கு ஏற்ப காடும் வானரங்களும் நிறைந்ததான திருவேங்கடமலையில் வந்து நிற்கின்ற நீர்மை குணத்தை எண்ணியே "ஆச்சர்யம்" என்றார். (வட திருவேங்கடநாட) – வட திருவேங்கடம் என்று ஏன் கூறினார்? அப்படியானால் அதற்கும் வடக்கே வேறு திவ்யதேசமே இல்லையா? பல உள்ளபோது ஏன் இவ்விதம் வடக்கு என்று திருமலையை உரைக்கவேண்டும்? இதற்கு விடை – பல ஆழ்வார்களும் அருளிச்செய்த திவ்யதேசம் என்பதையே இதன் மூலம் உரைக்கிறார். (வல்லிக்கொடிகாள்) - வல்லி என்றாலும், கொடி என்றாலும் பெண்ணையே குறிக்கும். அப்படி உள்ளபோது வல்லிக்கொடி என்று இரண்டு சொற்களையும் ஏன் இடவேண்டும்? இதன் மூலம், வல்லி என்ற பதம் ஆண் தன்மை சற்றும் இல்லாமல், பெண்களின் குணங்கள் மட்டுமே நிரம்பியதைக் குறிப்பதாகும். "கொடிகொள்" என்பதால் கொடியானது கொள்கொம்பைப் பற்றி நிற்பது போன்று, ஆண்மகன் ஒருவனை அணைத்து நிற்க வேண்டியதாக உள்ளதைக் கூறுகிறார். இங்கு கொள்கொம்பு என்றது நாயகனையே ஆகும். அப்படிப்பட்ட நாயகன் ஒருவனாகவும், அவனைப் பற்றும் நாயகிகள் பலவாகவும் என்று கருத்து. ஆழ்வார் ஒருவராகவும் அவரைச் சுற்றி ஸர்வேச்வரன் உட்பட பல ஸ்ரீவைஷ்ணவர்கள் நிற்பதைக் கூறினார். (நோயோ) – இவளைப் பிரிந்த இந்த வேதனை தாங்காமல் என்னால் உயிரை விடவும் இயலவில்லை, வாழவும் இயலவில்லை. (நோய் உரைக்கிலும் ஓ கேட்கின்றிலீர்) – எனது இந்த வேதனை கண்டு நீங்களாகவே என்னிடம் வந்து, "இப்படி ஆனதே உன் நிலை" என்று இரக்கம் கொள்ளவேண்டாமோ? அதனை விடுத்து நோயைக் கொள்பவனும் நானாகவே இருந்து, அந்த நோயுடன் நீங்கள் உள்ள இடம் தேடி நானாகவே வந்து, எனது நோயைப் பற்றி நானாகவே உரைத்து, அந்த நோய் ஏன் உண்டானது என்று உங்களிடம் நானாகவே கேட்பதாக நிலை உள்ளதே! அதாவது என்னைப் பிரிந்து உங்களுக்கு இந்த நோயும் துன்பமும் வரவேண்டியிருக்க, எனக்கு வந்தது அரிதாகவே உள்ளது. நீங்கள் இதற்காக எந்த சிகிச்சையும் செய்ய வேண்டாம்.

நான் கூறுவதைக் கேட்டபடி நின்றாலே போதுமானது. (உரையீர்) – தனது சொற்களைக் கேட்காமல் நிற்பவர்களிடம் "கூறுங்கள்" என்று விண்ணப்பித்தல், ஆசையின் மிகுதியைக் காட்டுகிறது. இதனைக் கேட்ட தோழிகள், "உங்கள் நோய் பற்றி நீங்களே அறிந்து கொண்டீர்கள். அதன் பின்னர் நாங்கள் வேறு என்ன கூற வேண்டும்?", என்றனர். இதற்கு நாயகன், "அந்த நோய்க்கான காரணம் என்ன என்று அறியவில்லை. நீங்கள் கூறவேண்டும்", என்றான். (நுமது வாயோ) - உங்களது மலர்ந்த முகம் எனது நோய்க்கான காரணமோ? (அது அன்றி வல்வினையேனுங் கிளியும் எள்கும் ஆயோ) – அந்த வாயில் இருந்து வெளிவருகின்ற "ஆயோ ஆயோ" என்று கிளிகளை விரட்டும் ஓசையோ? (கிளியும் எள்கும்) - எள்குதல் என்பதற்கு விடுபடுதல், ஈடுபடுதல் என்று இரண்டு பொருள் உண்டு. முதல் பொருளைக் கொண்டால், இவர்களின் சப்தம் கேட்டு அங்கிருந்து விடுபட்டுச் செல்லுதல் என்பதாகும். "ஈடுபடுதல்" என்று பொருள் கொண்டால் இவர்களது சொற்களின் இனிமையில் ஈடுபட்டு அங்கேயே நின்றன என்று கருத்து. (வல்வினையேனும்) - அவைகள் போல் நான் சப்தத்தால் மட்டுமே உங்களிடம் வசப்படவில்லை; உங்களது இனிமையான குரலாலும், அழகான ரூபத்தாலும் ஈடுபட்டபடி நின்றேன். மேலே உட்கருத்தில் - ஸ்ரீவைஷ்ணவர்களும் ஸர்வேச்வரனும் ஆழ்வாரின் பாசுரங்களில் ஈடுபட்டபடி நிற்பதைக் காண்க. இப்படி நிற்கும்போது கிளி போன்று ஸர்வேச்வரன் ஆழ்வாரின் பாசுரத்திற்கு மட்டுமே கட்டப்பட்டு நிற்கிறான், ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆழ்வாரிடம் பாசுரம் மட்டுமே அல்லாமல் அவரது ஆத்ம குணங்களுக்கும் கட்டுப்பட்டு நிற்கின்றனர் என்று கருத்து. (தொண்டையோ) தொண்டைப்பழம் போன்று சிவந்த உங்களது அதரங்களோ? (அடும்) இவை என்னை முடிந்து போகும்படிச் செய்கின்றன. (அறையோ இது அறிவரிது) – அவற்றில் எது என்னைச் சிக்க வைத்தது என்று என்னால் அறிய இயலவில்லை. அதனை உரைப்பீராக.

**வ்யாக்யானம்** - இத்தால் அழ்வாருடைய ஆத்மகுணங்களோடு தேஹகுணங்களோடு அவற்றில் ஏகதேசத்தோடு வாசியற ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உத்தேச்யமாயிருக்கிறபடி.

**விளக்கம்** – ஆழ்வாரின் ஆத்மகுணங்கள், அவரது தேஹகுணங்கள் (பாசுரங்கள், தேஜஸ் போன்றவை) போன்ற பலவற்றிலும் எந்தவிதமான வேறுபாடும் காணாமல் ஸ்ரீவைஷ்ணவர்கள் அவரிடம் ஈடுபட்டு நின்றனர்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்